
பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம் - 06

# சைவநெறி





தேர்ச்சி மட்டம்: 6.0

தேர்ச்சி: சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்

க.பொ.த. சாதாரண தர உதவிச் செயற்பாட்டுப் பத்திரம்

சமயம் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

கல்வி அமைச்சு

2024

**பயிற்சிக் கையேடு – 06** **நேரம்: 01.30 மணித்தியாலம்**

1. விபுலாநந்தரின் தாய், தந்தை பெயர் என்ன?
…………………………………………………………………………
…………………………………………………………………………

2. விபுலாநந்தரின் இளமைப் பெயர் யாது?
…………………………………………………………………………

3. விபுலாநந்தரின் பிரமச்சாரிய நாமம் யாது?
…………………………………………………………………………

4. விபுலாநந்தரின் குரு யார்?
…………………………………………………………………………

5. விபுலாநந்தரின் இசை நூல், நாடக நூல் என்பவற்றைத் தருக.
…………………………………………………………………………
…………………………………………………………………………

6. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் யார்?
…………………………………………………………………………

7. ஆறுமுகநாவலரின் தாய், தந்தை பெயர் என்ன?
…………………………………………………………………………
…………………………………………………………………………

8. கிறிஸ்தவம் பற்றிய ஆழமான அறிவு நாவலருக்கு ஏற்படக் காரணம் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

9. நாவலர் முதல் பிரசங்கம் செய்த ஆலயம் எது?
…………………………………………………………………………

10. நாவலரால் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை எது?
…………………………………………………………………………

11. நாவலருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கிய ஆதீனம் எது?

.................................................................................

12. நாவலர் செய்த சமயப் பணிகள் எவை?

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

13. நாவலர் எழுதிய கண்டன இலக்கியங்கள் எவை?

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

14. நாவலர் கண்டனங்கள் மேற்கொண்ட விடயங்கள் சில குறிப்பிடுக.

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

15. நாவலர் குருபூசைத் தினம் எது?

.................................................................................

16. உலகத்தில் காணப்படும் மூன்று வகையான பொருட்களும் எவை?

.................................................................................

.................................................................................

.................................................................................

17. ஆன்மா சதசத்து என்று ஏன் அழைக்கப்படுகின்றது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

18. சைவசித்தாந்தம் சொரூப நிலையில் கடவுளை எவ்வாறு அழைக்கின்றது?

……………………………………………………………………………

19. சொரூப இலக்கணம் என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

20. தடத்த நிலை என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

21. பசுவின் இயல்பு யாது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

22. ஆணவம் ஏன் மூலமலம் என்று அழைக்கப்படுகின்றது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

23. பசுக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

24. இருவினை ஒப்பு என்றால் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

25. மலபரிபாகம் என்றால் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

26. சத்திநிபாதம் என்றால் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

27. ஆணவத்தின் இயல்புகள் மூன்று தருக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

28. கன்மம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

29. மாயை என்றால் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

30. மாயை ஆன்மாவுக்குச் செய்யும் உதவி யாது?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

31. சங்கரன், சலமிலன் என்பவற்றிற்கு விளக்கம் தருக.

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

32. பிறவிப் பிணியை அறுக்கும் மருந்து எது?

..........................................................................

33. கடவுளின் இயல்பு மூன்று தருக.

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

34. ஆணவம் ஏன் இருளிலும் கொடியது எனக் கூறப்படுகின்றது?

..........................................................................

..........................................................................

..........................................................................

35. உலகத்தில் உயிர்கள் பெறுகின்ற பொருட்களில் மேலானது எது?

..........................................................................

36. திருவருட்பயன் கூறும் திருவருளின் இயல்பு யாது?

..........................................................................

..........................................................................

37. திருவருட்பயனில் கூறப்படும் அருளுரு நிலை என்றால் என்ன?

..........................................................................

..........................................................................

..........................................................................

38. திருவருட்பயன் காட்டும் சிவபெருமானின் இயல்பு எத்தகையது?

..........................................................................

..........................................................................

..........................................................................

39. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்வடிவில் வந்து வீடுபேற்றை அருள்கின்றார்?

.......................................................................

40. குரு ஆன்மாவின் மலத்தை எவ்வாறு நீக்கும்?

.......................................................................

.......................................................................

.......................................................................

## மொடியூல் 6 இன் விடைகள்

1) சாமித்தம்பி, கண்ணம்மை
2) மயிவாகனன்
3) பிரபோத சைதன்யர்
4) சுவாமி சிவாநந்தர்
5) இசைநூல் - யாழ்நூல், நாடகநூல் - மதங்க சூளாமணி
6) விபுலாநந்தர்
7) கந்தப்பிள்ளை, சிவகாமி
8) வேதாகமத்தை தமிழில் மொழி பெயர்த்தமை
   பார்சிவல் பாதிரியாரேடு ஏற்பட்ட தொடர்பு
9) வண்ணார்பண்ணை சிவன் கோயில்
10) வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியசாலை
11) திருவாவடுதுறை ஆதினம்
12) பிரசங்கம் மேற்கொண்டமை, சமய இலக்கியங்கள் வெளியிட்டமை கண்டன இலக்கியங்கள் வெளியிட்டமை, ஆலயங்களை புனரமைப்பு செய்தமை, புராண படனங்கள் மேற்கொண்டமை
13) சைவ தூஷண பரிகாரம், வச்சிர தண்டம், சுப்பிரபேதம்
14) மதமாற்றம், ஆகமப்புரழ்வு, மகளிர் ஒழுக்கம், அந்தணர் ஒழுக்கம், வான வேடிக்கை, வசன நடைகளில் காணப்பட்ட குறைபாடுகள் கோயில்களில் நிகழ்ந்த உயிர்ப்பலி, சிற்றின்ப நோக்கிலான நிகழ்ச்சிகள்
15)
16) அறிவிக்காமலே அறியும் பொருள் - பதி
    அறிவித்தால் அறியும் பொருள் - பசு
    அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் - பாசம்
17) ஒரு நிலையில் ஆன்மா சத்தாகவும் மற்றொரு நிலையில் அதுவே அசத்தாகவும் உணரப்படுவதால்
18) பரமசிவம்
19) கடவுள் குணங்குறிகளுக்கு அப்பாற்பட்டவராய், மனம் வாக்கு காயங்களுக்கு எட்டாதவராய் ஆனந்தமயமானவராய் அறிதற்கு அரியவராய் இருப்பது
20) சொரூப இலக்கணத்திலிருந்து அடியவர்களுக்கு அருளும் பொருட்டு ஒரு படி கீழே வந்து உருவ நாமங்களையும் குணங்குறிகளையும் பெறும் நிலை
21) அறிவித்தால் அறியக் கூடியவை, நித்தியமானவை
    பாசத்தையோ பதியையோ சார்ந்து நிற்பவை, சூக்குமமானவை
22) ஆணவம் அநாதியாகவே ஆன்மாவோடு சேர்ந்து இருப்பதால்

23) சகலர் - ஆணவம், கன்மம், மாயை

பிரளயாகலர் - ஆணவம், கன்மம்

விஞ்ஞானகலர் - ஆணவம்

24) உலக இன்பத்தைத் தரும் புண்ணியத்திலாவது துன்பத்தை தரும் பாவத்திலாவது மனம் செல்லாது சிவஞான காரியத்தில் மனம் செல்லுதல்

25) ஆணவம் வலிகுன்றுவது

26) இறைவன் அருள் ஆன்மா மீது படிவது

27) பசுவை அறியாமையுள் அழுத்தி நிற்பது பசுவிடம் கோபம், குரோதம், ஆசை, மயக்கம் முதலிய தீய குணங்களை உண்டாக்குவது

28) 3 - பிராரர்த்தம் ஆகாமியம், சஞ்சிதம்

29) ஆன்மாவின் உடல், கருவி, கரணங்கள், உலகம் தோன்றுவதற்கு மூலமான கருவி

30) ஆணவமாகிய பெரும் இருட்டிலிருந்து விடுபடுவதற்கு இறைவனை அறிவதாகிய பேரொளி தோன்றும் வரையில் விளக்குப் போல் வழிகாட்டும்

31) சங்கரன் - சுகம் செய்பவன்

சலமிலன் - விருப்பு வெறுப்பு அற்றவன்

32) கடவுள்

33) சா்வ வியாபகர், ஒப்பில்லாதவர், நித்தியமானவர், அறிவிக்காமல் அறிபவர், விருப்பு வெறுப்பு அற்றவர்

34) இருள் தன்னைக் காட்டும் மற்றவற்றை காட்டாது, ஆணவம் தன்னையும் காட்டாது மற்றவற்றையும் காட்டாது

35) திருவருள்

36) இருளைக் கெடுக்கும் ஒளியாகக் காணப்படும்

37) திருவருள் வெளிப்பட்டு பிரகாசிக்கின்ற அருள் வடிவமாகிய அருட்குருவின் இயல்பு ஆகும்

38) எல்லாப் பற்றுக்களையும் கடந்தவா்

39) குருவடிவில் அல்லது குருமூா்த்தத்தில் வந்து அருளுகிறாா்

40) திருவருளானது நேரே நின்று மலங்களை போக்காது தான் அதிட்டித்த ஒரு குரு வடிவை கொண்டு பார்வையாலும் பாவனையாலும் நீக்கும்